www.tamilarangam.net

புலிகள்

# விடுதலை இயக்கமா?

# இயக்க அராஜக வாதிகளா?

"ரெலோ" இயக்கத்தை அழிக்க முயற்சிக்கும் "புலிகளின்" மிருகத்தனமான நடவடிக்கை பற்றிய தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உத்தியோக பூர்வ அறிக்கை! இல.1

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
Thamil Eelam Liberation Organization
TELO-LONDON BRANCH, 143 WAKEFIELD STREET, LONDON E6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இழப்புக்களின் மத்தியிலே......

சிறீலங்காவின் இனவெறி அரசு தனது எசமானர்களின் அனுசரணையுடன் அமுல் செய்து வரும் இனவழிப்புக் கோட்பாடுகளின் விளைவாக, மனிதவுருவில் நடமாடும் மிருக வெறிகொண்ட இராணுவ வெறியர்களின் அடவாடித்தனங்களின் விளைவாக.....

** எமது உரிமைகள் மறுக்கப்பட்டு காணப்படுகின்றன!
** எமது உடமைகள் சிதைக்கப் படுகின்றன!
** எமது மண்ணில் மனிதப்படுகொலைகள், மிருகத்தனமான கற்பழிப்புக்கள், சிறைவைப்புக்கள், தாங்கமுடியாத சித்திரவதைகள்தான் தினசரிப்புதினங்கள் ஆகிவிட்டன!

இவற்றிற்கு மேலாக 'கறுப்பு யூலைகளையும்' இனக்கலவரங்களையும் நாம் தினமும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். ஆயினும் இவையெல்லாம் ஒரு விடுதலைப் போராட்டத்தில் தவிர்க்க முடியாத நிகழ்வுகள் என்பதினை தெளிவாக உணர்ந்து எமது மக்களும், விடுதலைப்போராளிகளும் எதற்கும் கலங்காத திடமான மனத்துடன் இவற்றினைத் தாங்கிவருகின்றனர். அதற்கு மேலாக விடுதலைப் போராட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றனர்.

## நம்மவரே எதிரிக்கு துணையாக.....

இத்தகைய சூழ்நிலையில் எமது மக்களினதும் விடுதலைப்போராளிகளதும் கலங்காத மனங்களை கடந்த 29-04-86ம் திகதி நடந்த சம்பவங்கள் கலங்க வைத்துள்ளது.

** இத்தகைய படுகொலைகளைச் செய்பவர்கள் விடுதலைப்புலிகளா..?
அல்லது இவர்கள் விடுதலைப்போராளிகள் வேசமிட்ட எதிர்புரட்சியாளர்களா...?
** இவர்கள் எதிரிக்குச்சாதகமானவர்களா....?
இத்தகைய 'விரோதசக்திகளையா' விடுதலைப்போராளிகள் என எண்ணி ஏமாந்துவிட்டோம்...?

என்றெல்லாம் எண்ணி வேதனைப்படுகின்றனர். தங்கள் கவலைகளையும் அதிருப்தியையும் வெளிக்காட்டினால் தாமும் இந்த (விடுதலை..??)புலிகளால் வேட்டையாடப்பட்டு விடலாம் என்று பயப்படுகின்றனர் எனினும் வேதனையின் எல்லையில் அச்சத்தை விலக்கி தமது துக்கத்தைக் காட்ட தமிழ் ஈழமெங்கும் கறுப்புக் கொடிகளையும், மரணவைபவத் தோரணங்களையும் கட்டியிருக்கின்றனர் தமிழ் மக்கள்.

## ரெலோவின் மீது தாக்குதல் நடாத்தி.....

29-04-86ம் திகதி மாலையில் எத்தகைய காரணமும் இன்றி ரெலோவின் பயிற்சி முகாம்களின் மீது கொலைவெறிகொண்ட விடுதலைப்புலிகள் 'பாரிய தாக்குதல்களை' மேற்கொண்டனர். இவற்றின் விளைவால்

** விடுதலைப்போராளிகளில் 150ற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்....
"ஏன் இந்த அராஜகங்கள்?"
** இயக்கத்தின் முக்கியமான உறுப்பினர்களை பயங்கரமாகச் சித்திரவதை செய்து கோரமாகக் கொலை செய்துள்ளனர்....
"எதற்காக இப்படிச் செய்தனர்?"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ரெலோவின் முகாம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் தரை வழியாகவும், சிறிலங்காவின் விமானப்படையினர் விமானவழியாகவும் ஒரே சமயத்தில் இணைந்து தாக்குதல்களை நடத்தியுள்ளனர்....

"எதிரிக்கும் இவர்களிற்கும் இடையேயுள்ள இரகசிய உடன்படிக்கைகள் என்ன?"

**விடுதலை கானப் போராட்டத்தில் குதித்த இளம் போராளிகளை கொலை செய்து அவர்களின் உடல்கள் சிதைக்கப்பட்டு, அரைகுறையாக எரிக்கப்பட்டு தமிழ் ஈழத்தின் வீதிகளில் கேட்பாரற்று போடப்பட்டுள்ளனர்...

"இதைச் செய்தவர்கள் எதிரியின் கையாட்களா?"

**நிதானமற்ற தாக்குதலின் காரணமாக அப்பாவி மக்களில் 20ற்கு மேற்பட்டவர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். மேலும் இவர்களது வெறித்தனமான இத் தாக்குதலால் 300ற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்...

"இதனைச் செய்தவர்கள் இராணுவத்தின் கைக்கூலிகளாக எப்போது தம்மை மாற்றிக் கொண்டனர்?"

**எதிர்த்து போராட மனமின்றி சரணடைந்த விடுதலைப் போராளிகள், கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் வாகனங்களில் அடைத்து வைக்கப்பட்டு வெடிகுண்டுகளால் தகர்த்தெறியப்பட்டனர்.....

"இவ் வெறிபிடித்தவர்களுக்கு எப்போது மொசாட் பயிற்சி அளித்தது?"

**சிறுவர்கள் நால்வர் வீதியோரத்தில் வைத்து உயிரோடு தீ மூட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்

"எதிர்காலப் போராளிகளின் மீது அப்படியென்ன இந்த வெறியர்கட்கு கோபம்?

<u>புலிகளின் இரத்ததாகம் தணிந்துவிட்டதா</u>......?

"புலிகளின் தாகம் தமிழ் ஈழத் தாயகம்" என்று கூக்குரல் இடுகின்ற இவர்களது தாகம்தான் என்ன? சக விடுதலை அமைப்புகளை அழித்தலும், சக தலைமைகளின் உயிர்களைக் குடித்தலும்தான் இவர்களின் தாகமா? இதுவரை இவர்களது பதவி ஆசை எத்தனை உயிர்களைக் குடித்துவிட்டது? <u>"செம்படை" என்ற புனைபெயரில்</u> எத்தனை கொள்ளைகளை நடத்திவிட்டது?. இன்னுமா இவர்களது தாகம் தணியவில்லை?.

இவர்களின் தாகம் வெறியாக மாறி..அவ் வெறிகளை மறைக்க..அதன் விளைவாக எதிரிக்கும் நண்பனுக்கும் வேறுபாடு தெரியாத நிலையில்

** எதிரிக்குத் துணையாக மாறி....

** சக போராளிகளை எதிரியாகக் கருதி...

** விடுதலைப் போராட்டத்தினை முறியடிக்கும் இரகசியஒப்பந்தத்தினை மறைமுகமாக எதிரியுடன் செய்து வைத்திருக்கும் இவர்கள் கடந்த சில நாட்களில் "கேட்போரின் நெஞ்சங்களை கலங்கடிக்கும் அரக்க நாடகத்தை அரங்கேற்றிவிட்டு" வெற்றிவிழா கொண்டாடி மகிழ்கின்றனர்.

<u>இவர்களின் வெற்றி யாருக்காக</u>.....

உடன்பிறந்தவர்களையும் ஊர்மக்களையும் சடலங்களாக்கி, ஏனைய விடுதலை அமைப்புக்களை நிர்மூலமாக்கி, சகதலைவர்களைப் பிரேதங்கள் ஆக்கி, கூட்டணித் தலைவர்களைக் கொலைசெய்து யாருக்காக இவர்கள் போராடுகின்றார்கள்?. எவருக்காக இந்த அராஜகங்களை சொந்த மண்ணிலேயே நடத்திக் கொண்டிருக்கின்றனர் இவ்வெறிச்செயல்களால் போராளிகளின் உண்மையான பலத்தையும், மறைவிடங்களையும் அறிந்துகொண்ட சிறிலங்காவின் இனவெறிப்படைகள் இன்று தமிழ் ஈழத்தில் புகுந்து அராஜகங்களையும் அழிவுகளையும் செய்து கொண்டிருக்கின்றது. இவற்றை ஈடுசெய்ய இவ் வெறிக்கும்பலினால் முடியும் என்று கருதுகின்றீர்கள்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களால் உருவாக்கப்பட்டு, மக்களின் ஆதரவில் வளர்ந்து மக்களோடு மக்களாக புரட்சிப்பாதையில் எமது விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர்கள் என்ற வகையில், விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் பற்றி தெளிவு படுத்தக் கடமைப்பட்டுள்ளோம்...

** இவர்கள் 'நொண்டிக்குற்றச்சாட்டுக்களை' முன்வைப்பதின் மூலம் 150ற்கும் மேற்பட்ட விடுதலைப்போராளிகளைக் கொலைசெய்த குற்றத்தை மறைக்க முடியாது.

** இப்படுகொலைகள் முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை.

** இவற்றைச் செய்த அராஜகத்தலைமைக்குள்ளே வெளிநாடுகளைச் சேர்ந்த விரோதசக்திகள் ஊடுருவியுள்ளது என நாம் வன்மையாக குற்றம் சாட்டுகின்றோம்.

** இவ் வெளிநாட்டுச் சக்திகளினது ஊக்குவித்தலின் காரணமாகவே இவ் அராஜகத் தலைமை இப்படுகொலைகளைச் செய்துள்ளது.

பொதுமக்களே...!.

இந்த அராஜகத்தலைமையின் ஏவலின் விளைவாக இப் பாதகங்களைச் செய்த விடுதலைப்புலிகளைச் சேர்ந்த அடிப்படைப் போராளிகள் எதுவுமே அறியாத அப்பாவிகள். அராஜகத்தலைமையின் சூழ்ச்சிஅரசியலை புரட்சிகர அரசியல் என முட்டாள்தனமாக நம்பிச் செயற்படுபவர்கள். எனவே இவ் அராஜகச்செயல்கட்காக அவர்களை மன்னித்துவிடுங்கள். இவர்களை பிழையான வழியில் தமது நலன்கருதி நடத்துகின்ற அராஜகவாதிகளை இனம் கண்டு தூக்கியெறியுங்கள் என வேண்டிக்கொள்கின்றோம்.

இப் படுகொலைகளின் பின்னணிகள்....

** ஆரம்பகாலத்தில் ரெலோவுடன் இணைந்திருந்த இவ் அராஜகத்தலைமை பின்பு விலகியதன் காரணம் என்ன?

விலகுவதிற்கு இவர்கள் முன்வைத்த அரசியல் காரணங்கள் என்ன? "தலைவராக வரவேண்டும் என்ற அற்ப ஆசையா?"

** ரெலோ ஆரம்பிக்கப் பட்டதின் பின்புதான் ஏனைய இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு உருவான இயக்கங்களின் தலைவர்கள் அனைவரையும் கொலை செய்வதிற்கு இவ்வராஜகத் தலைமைகள் முயற்சித்தமையை யாவரும் அறிவோம். ஏன் இந்த முயற்சிகளைச் செய்தனர்?

** ரெலோ தலைவர் சிறிசபாரத்தினத்தை படு கொலை செய்வதிற்கு இவர்கள் ஏன் முயற்சி செய்தனர்?

** 1983ம் ஆண்டின் இனக்கலவரத்தின் விளைவாக எமது மக்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்தமையால் எமது கொள்கைகளை இந்திய உபகண்டத்தின் பாதுகாப்புடன் தொடர்புபடுத்தி வகுத்தோம். இதன்போது இந்திய அரசுடனும், ஏனைய அரசியல் கட்சிகளுடனும் பேதமற்ற உறவினை வளர்க்க இணைந்து செயற்படுமாறு இவர்களை அழைத்தோம்.

இதற்கு வெவ்வேறு காரணங்களைச் சொல்லி, எம்மை நம்பவைத்து தனித்தே செயற்பட்டனர். ஏன்? எதற்காக?

** தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை ஒரே குரலில் எடுத்துச் சொல்வதிற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் எதிலும் இணைந்து செயற்பட இவர்கள் மறுத்தது எதற்காக?

** அரைக்கோடி தமிழ் பேசும்மக்கள் ஒரு கோடி சிங்கள மக்களின் பேரினவாதத்தால் ஒடுக்கப்படுகின்ற நிலைமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஐந்து கோடி இந்தியத் தமிழர்களின் உறவை வளர்க்க இணைந்து செய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழைத்தோம். ஏன் இணையவில்லை. தவிர்த்தே செயற்பட்டனர். ஏன்? எதற்காக?.

** ஈழ தேசிய விடுதலை முன்னணியை அமைத்து செயற்பட்டு வந்தபோது இம் முன்னணியின் பெயரில் அறிக்கைகள் வெளியிட்டபின்பு தற்போது நாம் இந்த முன்னணியில் இல்லை என்று அறிக்கை விட்டதின் நோக்கம் என்ன?

** ரெலோவின் இராணுவப் பயிற்சி பற்றிய விபரங்களை மேற்கத்திய பத்திரிகைகள் வெளியிட்டிருந்த போது, இவ் அராஜகவாதிகள் அவற்றை இரகசியமாக மறுபிரதிகள் செய்து அமெரிக்கா போன்ற நாடுகளில் விநியோகித்தது எதற்காக?

** உண்மைக்கு புறம்பாக இவர்களை கட்டுப்பாடானவர்கள் எனவும், அதிக அளவில் தாக்குதல்களைச் செய்பவர்கள் எனவும் தற்போது மேற்கு நாட்டுப் பத்திரிகைகள் குறிப்பிடுவது எதற்காக?. இவர்களிற்கு இடையேயுள்ள தொடர்புகள் என்ன?

** தொலைக்காட்சி சேவையில் இவ் இயக்கத்தினர் பற்றிய விபரங்கட்கு முக்கியத்துவம் கொடுத்து காட்டப்பட்டதின் காரணங்கள் என்ன?

** இந்திய அரசு பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை மேற்கொள்ளும் இத் தருணத்தில் 'இந்தியா நாட்டுக்குள் நுழைந்தால் பங்களாதேஷில் ஏற்பட்ட நிலைமைதான் எமக்கும் ஏற்படும்' என கூறும் சுவரொட்டிகளை ஏன் இவர்கள் "அநாமதேய பெயர்களில்" ஒட்டினார்கள்.

இந்திய அரசு தமக்கு அவ்வாறான எண்ணம் இல்லையெனக் கூறிய பின்பும் இவ்வாறான பொய்ப்பிரச்சாரங்களை செய்ததின் காரணம் என்ன?

** இந்திய அதிகாரிகள் கொழும்பில் உள்ள வேளையில், "சீக்கிய கோவிலுக்குள் இந்திய படைகள் நுழைந்த வேளையில் "களவு என்ற பொய்க்காரணம் காட்டி இந்திய நட்புறவு இயக்கமான ரெலோவின் போராளிகளில் நூற்றுக்கு மேற்பட்டவர்களை கொன்று குவித்ததின் காரணம் என்ன?

மக்களே எமக்கு தெரிந்த சகல காரணங்களையும் வெளியிட முடியவில்லை. எம்மால் முடிந்தவற்றை தந்திருக்கின்றோம் "<u>இது தனிய ரெலோவிற்கு மட்டும் ஏற்பட்ட இழப்பு அல்ல அதிற்கு மேலாக இது முழுத்தமிழ் இனத்திற்கும் ஏற்பட்ட மிகக் பெரும் பாரிய இழப்பு ஆகும்</u>

"விடுதலைப்போராளிகளின் மரணம் இனத்துரோகிகளுக்கு
மட்டும்தான் மகிழ்ச்சியைத் தரும்"
"இதனை விலங்கு மனம் படைத்தவர்களால் மட்டும்தான்
வெற்றிவிழாவாகக் கொண்டாடமுடியும்"
"இதனை சூழ்ச்சி அரசியல் வாதிகள் மட்டுமே சொந்தம்
கொண்டாடமுடியும்"

எமது இலட்சியம் மனித உடல்களை அழிப்பதால் அழிக்கப்பட இயலாதது. ஏனெனில் அவை ஆயிரக்கணக்கான இலட்சிய இதயங்களின் செங்குருதியில் வளர்ந்தவை. ஆதலால் எந்தச் சூழ்ச்சி அரசியலும் எம்மை அழித்துவிட முடியாது.

"<u>இன்று உண்மைகள் மறைக்கப்படலாம்</u>!.
<u>சூழ்ச்சிகள் கொடிகட்டிப் பறக்கலாம்</u>!
<u>ஆனால் மக்கள் என்றுமே ஏமாளிகள் அல்ல</u>!
<u>ஆதலால் மக்களே</u>!
<u>இப்படுகொலைக்கான உண்மைக்காரணத்தை கண்டறிய</u>
<u>பகிரங்க விசாரணையைக் கோருங்கள்</u>!"

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
வெளியீட்டுத் திகதி, [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்